# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2021 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க,*
## குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம்

---

*(2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2021,* நவெம்பர் மாதம் 12 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2021 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க,**
**குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம்**

[*2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ. - ஓ. 24/2018*

***(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 14ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *351 ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''இரண்டு ஆண்டுகளை,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஐந்து ஆண்டுகளை,'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், ''ஐந்தாண்டுகளை விஞ்சாத ஆனால் இரண்டு ஆண்டுகளை விஞ்சிய'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பத்தாண்டுகளை விஞ்சாத ஆனால் ஐந்து ஆண்டுகளை விஞ்சிய'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

''(3அ) (அ) (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட காலவரையறைகள் எவ்வாறிருப்பினும், நிரந்தர வதிவிட விசாவின் காலப்பகுதி அமைச்சரினால் தீர்மானிக்கப்படலாம்.

(ஆ) பந்தி (அ) இன் நோக்கத்துக்காக, "நிரந்தர வதிவிட விசா" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் வழங்கப்பட்ட விசா ஒன்று எனப் பொருள்படும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*